தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்



Vol: 03 | Issue: 246 | 4 Pages | 14.07.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 03 | இதழ்: 246 | 4 பக்கங்கள் | 14.07.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று**

**விளக்கம்:** இரப்பவர் இல்லையானால், இப் பெரிய உலகின் இயக்கம் மரத்தால் செய்த பாவை கயிற்றினால் ஆட்டப்பட்டுச் சென்று வந்தாற் போன்றதாகும்.

# பெரம்பூர் எம்.எல்.ஏ. அலுவலகம் திறப்பு: தொகுதி மக்களையும் சந்திக்கிறார் முதல் அமைச்சர் விஜய்

சென்னை, ஜூலை 14

முதல்அமைச்சர் விஜய் சட்டமன்றத் தேர்தலில் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதில் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பெரம்பூர்எம்.எல்.ஏ.வாக உள்ளார். தொகுதி மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார். அதன்படி, பெரம்பூர் தொகுதி அலுவலகம் சென்னை வியாசர்பாடி சர்மா நகர் 1வது தெருவில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் முன்பகுதியில், "பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ச. ஜோசப் விஜய்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றிலும் காம்பவுண்டு சுவர் அமைக்கப்பட்டு, கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. முதல் அமைச்சர் விஜய்க்காக தனி அறையும் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தினுள் தனியாக கம்ப்யூட்டர்கள் அமைக்கப்பட்டு, 10 பணியாளர்கள் தினமும் பொதுமக்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அலுவலகத்தை முதல்அமைச்சர் விஜய் இன்று பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கிறார். சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, இன்று முதல் முறையாக அவர் தனது தொகுதிக்குச் செல்வதால், அவருக்கு த.வெ.க. நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர். ஏற்கனவே செயல்பட்டு வந்த கட்டிடம் ஒன்றை புதுப்பித்து, அதனை நவீனமயமான எம்.எல்.ஏ. அலுவலகமாக மாற்றியுள்ளனர்.



எம்.எல்.ஏ. அலுவலகத்தை திறந்து வைத்த பிறகு, முதல்அமைச்சர் விஜய் அருகில் உள்ள ரேஷன் கடைக்குச் சென்று ஆய்வு செய்கிறார். புதிய ரேஷன் கார்டுகள் மற்றும் பட்டாக்களையும் பொதுமக்களுக்கு அவர் வழங்குகிறார்.

எம்.எல்.ஏ. அலுவலகத்தில் தொகுதி மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக செயலி ஒன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. செல்போன் செயலியான அதில், பொது மக்கள் தங்களது குறைகளை எந்த நேரத்திலும் தெரிவிக்கலாம். பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களது குறைகளையும் புகார்களையும் தொகுதி எம்.எல்.ஏ.வான முதல்அமைச்சரிடம் நேரடியாகத் தெரிவிக்கும் வகையில் தொடங்கப்பட உள்ள இந்த செயலிக்கு 'மக்கள் சேவை தளம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. முதல்அமைச்சர் விஜய் இந்த பிரத்யேக செல்போன் செயலியையும் நாளை அறிமுகம் செய்து தொடங்கி வைக்கிறார்.

இந்தச் செயலி மூலம் பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளான மின்சாரம், சாலை வசதி, குடிநீர், துப்புரவுப் பணி, கல்வி மற்றும் மருத்துவ உதவிகள், அரசு நலத்திட்டங்கள், வீட்டு வசதி உதவிகள், வேலை வாய்ப்பு, வணிகம் மற்றும் சட்டரீதியான ஆவண உதவிகள், அவசர உதவிகள் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகள் குறித்தும் நேரடியாக முதல்அமைச்சர் விஜய்யின் கவனத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

இந்தச் செயலி மூலம் பொதுமக்கள் தங்களது புகாரைப் பதிவு செய்ததும், அடுத்த சில நொடிகளிலேயே அது பெரம்பூர் எம்.எல்.ஏ. அலுவலகத்தைச் சென்றடையும். புகார் சமர்ப்பிக்கப்பட்டவுடன், அதை ஏற்றுக்கொண்டதற்கான உறுதிப்படுத்தல் குறுஞ்செய்தி, புகார் அளித்தவரின் செல்போன் எண்ணுக்கு செல்லும் வகையிலேயே செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. புகார் அளித்தவர்கள் தங்களது புகார் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது என்பதையும் செல்போன் மூலமாகவே தெரிந்துகொள்ளலாம். புகார் அளிக்கப்பட்டது முதல், பிரச்சினைகள் தீர்க்கப்படுவது வரை தங்களது மனுக்கள் எந்த நிலையில் உள்ளன என்பதையும் தொகுதி மக்கள் கண்காணிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல்அமைச்சர் விஜய் அறிமுகப்படுத்தும் இந்தச் செயலி மூலம் பெறப்படும் புகார்கள் மீது குறைந்தபட்சம் 3 நாட்களுக்குள் முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குடிநீர், மின்சாரம், சாலை வசதி, துப்புரவுப் பணிகள் போன்ற அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு அதிகபட்சமாக 10 நாட்களுக்குள் முழுமையான தீர்வு காணப்பட்டு, அது குறித்த விரிவான பதிலை மக்களுக்கு செயலி வழியாகவே தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ. அலுவலகத்தில் இச்செயலியைப் பிரத்யேகமாகக் கண்காணிப்பதற்கான நவீன கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 'டிஜிட்டல்' மக்கள் சேவை செயலி பொதுமக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று திறக்கப்பட உள்ள பெரம்பூர் தொகுதி சட்டமன்ற அலுவலகத்தை பொதுமக்கள் நேற்றே நேரில் சென்று பார்த்து புகைப்படங்களையும் எடுத்தனர். இந்த அலுவலகத்துக்கு எதிரில் உள்ள பெரிய காம்பவுண்டு சுவரில் த.வெ.க. அரசின் சாதனைகளை விளக்கும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பிறந்த குழந்தைக்கு தங்க மோதிரம், சிங்கப்பெண் திட்டம் ஆகியவை பற்றிய புகைப்படங்கள் முதல்அமைச்சர் விஜய் படத்துடன் இடம்பெற்றுள்ளன. விழாவையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல்அமைச்சர் விஜய் செல்லும் வழியில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்புப் பணிகளை போலீசார் நேற்றே தொடங்கியுள்ளனர்.

## கனடா: இசை திருவிழாவில் துப்பாக்கி சூடு; 2 வாலிபர்கள் பலி பிரதமர் இரங்கல்



ஒட்டாவா ஜூலை 14

கனடாவில் இசைதிருவிழாவில் நடந்ததுப்பாக்கி சூட்டில் 2 வாலிபர்கள் பலியானார்கள்.

கனடாவின் டொராண்டோ நகரில் வார இறுதி நாளான கடந்த சனிக்கிழமை இரவில் சல்சா ஆன் செயின்ட் கிளேர் என்ற புகழ்பெற்ற லத்தீன் கலாசார திருவிழா நடந்தது. வீதி திருவிழாவான இந்த உள்ளூர் திருவிழாவில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி வந்து தெருக்களில் வலம் வந்து கொண்டாடினர்.

அப்போது செயின்ட் கிளேர் தெரு மற்றும் ஆர்லிங்டன் தெரு அருகே மர்மகும்பல் ஒன்று, தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட தொடங்கியது. இதனால் கச்சேரிக்கு வந்தவர்கள் அலறி அடித்து கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்த சம்பவத்தில் இளம்பெண்கள் உள்பட 8 பேர் உடலில் குண்டு பாய்ந்துபடுகாயம்அடைந்தனர். இதில்2வாலிபர்கள்சம்பவஇடத்திலேயே பலியானார்கள். 6 பேர்காயம்அடைந்தனர். கூட்ட நெரிசலை பயன்படுத்தி, தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடி விட்டனர்.

இதுபற்றி தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதுடன், விசாரணையையும் தொடங்கினர். சம்பவம் பற்றி நகர கவுன்சிலர் ஜோஷ் மத்லோ கூறும்போது, இசை திருவிழாவில் துப்பாக்கி சூடு தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதன் எதிரொலியாக நேற்று நடக்க இருந்த இறுதி நாளுக்கான திருவிழா ரத்து செய்யப்பட்டது என்றார்.

இந்த சம்பவத்திற்கு கனடா பிரதமர் மார்க் கார்னி இரங்கல் தெரிவித்து கொண்டார். துணிச்சலாக செயல்பட்டு, பெரிய அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுத்ததற்காக போலீசாரையும் அவர் பாராட்டினார்.

## வங்காளதேசத்தில் வெள்ளம், நிலச்சரிவு; 51 பேர் பலி



டாக்கா ஜூலை 14

வங்காளதேசத்தில் கனமழை தொடர்ச்சியாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 51 பேர் பலியாகி உள்ளனர்.


இந்தியாவின் அண்டை நாடான வங்காளதேசத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அந்நாட்டின் சிட்டகாங் மாகாணத்தின் 7 மாவட்டங்களில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

கனமழையால் அம்மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. அதேவேளை, கனமழை தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

கனமழை தொடர்ச்சியாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரைபலர்உயிரிழந்துள்ளனர்எனவங்காளதேசஅரசுதெரிவித்துள்ளது.

இதன்படி, மொத்தம் 64 மாவட்டங்களில் உள்ள 7 மாவட்டங்கள் வெள்ளநீரால் சூழப்பட்டு உள்ளன. 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 51 ஆக உயர்ந்து உள்ளது. இவற்றில் அதிக அளவாக காக்ஸ் பஜார் மாவட்டத்தில் 28 பேர் பலியாகி உள்ளனர். சட்டோகிராம் பகுதியில் 13 பேர், பந்தர்பன் பகுதியில் 6 பேரும் பலியாகி உள்ளனர். இவர்களில்பலர்அகதிகள்முகாம்களில்தங்கியுள்ளரோகிங்கியா முஸ்லிம்கள் ஆவர்.

## ஜம்முகாஷ்மீரில் லேசான நில அதிர்வு



ஸ்ரீநகர், ஜூலை 14

ஜம்முகாஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் லேசான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அதிகாலை2மணியளவில்ஏற்பட்டஇந்தநிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 3.6 ஆக பதிவானதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் (NCS) தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் அச்சமடைந்தனர். 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் எந்தவித சேதமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

## பிரவாஸ் 5.0இல் அடுத்த தலைமுறைக்கான Tata Motors, புதிய Ultra Prime மற்றும் Starbus Prime ரகங்களையும் அறிமுகம்



பிரவாஸ் 5.0இல் அடுத்த தலைமுறைக்கான பயணிகள் போக்குவரத்து தீர்வுகளை காட்சிப்படுத்தும் Tata Motors, புதிய Ultra Prime மற்றும் Starbus Prime ரகங்களையும் அறிமுகப்படுத்துகிறது

இந்தியாவின் மிகப்பெரிய வணிக வாகன தயாரிப்பு நிறுவனமான Tata Motors, இன்று பிரவாஸ் 5.0 நிகழ்வில் தனது அதிநவீன வணிக ரீதியிலான பயணிகள் போக்குவரத்து தீர்வுகளின் தொகுப்பை காட்சிப்படுத்தியது.

முற்றிலும் புதிய Tata Ultra Prime மற்றும் Tata Starbus Prime ரேஞ்ச் பஸ்களின் அறிமுகம் இதில் முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் கருத்து தெரிவித்த Tata Motors லிமிடெட்டின்வர்த்தகபயணிகள்வாகனப்பிரிவின்துணைத் தலைவரும் வணிகத் தலைவருமான ஆனந்த் S அவர்கள், "ஃபிளீட் ஆபரேட்டர்கள் மற்றும் தொழில்துறை பங்குதாரர்களுடன் தொடர்புகொள்வதற்கும், நாடு முழுவதும் பயணிகள் போக்குவரத்து தேவைகள் எவ்வாறு உருவாகி வருகின்றன என்பது பற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்கும் பிரவாஸ் ஒரு முக்கியமான தளமாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு நாங்கள் காட்சிப்படுத்தியிருப்பது, ஊழியர்கள் போக்குவரத்து, சுற்றுலாப் பயணம், பள்ளிப் போக்குவரத்து அல்லது கடைசி மைல் இணைப்பு என அனைத்துப் பயன்பாடுகளிலும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நாங்கள் ஆழமாகப் புரிந்து வைத்துள்ளதை பிரதிபலிக்கிறது. என்று கூறினார்.



துளிர் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அடையாறு நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு துளிர் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக 'துளிர் ஊட்டச்சத்து பெட்டகங்களை' வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறை அமைச்சர் திரு. R. குமார் அவர்கள் வழங்கினார்கள். நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவர்கள், துளிர் அமைப்பின் நிர்வாகிகள் Dr பால வெங்கடராமன், பிரகாஷ், ரம்ய லக்ஷ்மி, மகேஸ்வரி மோகன் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழக வெற்றிக் கழகத்தின் நிறுவனத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆடை மற்றும் நடனப் போட்டிகள் மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கிழக்கு (வ) ஒன்றிய செயலாளர் டாக்டர் தீபன் சக்கரவர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு தொகுதி எம்எல்ஏ கார்த்திகேயன், சோழவந்தான் எம்எல்ஏ கருப்பையா, தெற்கு தொகுதி எம்எல்ஏ கோபிசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் டாக்டர் சுந்தரபாண்டியன் முன்னிலை வகித்தார். புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் மருது பாண்டியன் உப்பட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பயனாளிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்

# எ.வ.வேலுவுக்கு எதிரான லுக் அவுட் நோட்டீசுக்கு தடை: சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு




சென்னை, ஜூலை 14

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தில் பல கோடி ரூபாய் முறைகேடு நடந்ததாக, அறப்போர் இயக்கம் அளித்த புகாரின் பேரில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவின் வீடு மற்றும் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். தொடர்ந்து விசாரணைக்கு ஆஜராகும்படி அவருக்கு சம்மன் அனுப்பியதோடு, தேடப்படும் நபராக அறிவித்து 'லுக் அவுட்' நோட்டீசையும் பிறப்பித்தனர்.

இதையடுத்து, லஞ்ச ஒழிப்பு போலீசார் பதிவு செய்துள்ள வழக்கையும், லுக் அவுட் நோட்டீசையும் ரத்து செய்ய வேண்டும் என்று 2 மனுக்களை ஐகோர்ட்டில் எ.வ.வேலு தாக்கல் செய்தார். இந்த மனுக்கள் நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு கடந்த 9ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது எ.வ.வேலு தரப்பில் மூத்த வக்கீல்கள் பி.வில்சன், சித்தார்த் லுத்ரா ஆகியோர் ஆஜராகி, "அரசின் முன்அனுமதி பெறாமல் இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளனர். சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ளதால் விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை. இதில் அரசுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. விதிகள் மீறப்பட்டதாக அதிகாரிகள் மீது ஏற்கனவே துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. எனவே, அரசியல் பழி வாங்கும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ள இந்த லுக் அவுட் நோட்டீசையும், வழக்கையும் ரத்து செய்ய வேண்டும்" என்று வாதாடினர்.

லஞ்ச ஒழிப்பு போலீசார் சார்பில் ஆஜரான மாநில தலைமை குற்றவியல் வக்கீல் ஜான் சத்தியன், "எ.வ.வேலு நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக பதவி வகிக்கும்போது, 2022ம் ஆண்டு சாலை அமைக்காமலேயே 77 சதவீத தொகையை ஒப்பந்ததாரர்களுக்கு கொடுத்துவிட்டனர். இதுகுறித்து முன் னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ந்தேதி புகார் செய்தார். உடனே சாலை வேக வேகமாக போடப்பட்டது. இது நாள் வரை அந்த சாலைக்கும் தரச்சான்று கொடுக்கப்படவில்லை.

ஆனால், பணம் முன் கூட்டியே. அதுவும் பணி முடிவதற்கு முன்பே 85 பணிகளுக்காக ரூ.195 கோடியை ஒப்பந்ததாரர்களுக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்பு சட்டத்தில் சமீபத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி, வழக்கு தொடர அனுமதியளிக்க தகுதியான அதிகாரி யார் என்பது தெரிவிக்கப்படவில்லை. எனவே, கவர்னர் ஒப்புதல் அளிக்கவில்லை என்று மனுதாரர் கூறமுடியாது" என்று வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "எ.வ.வேலு வருகிற 12ந்தேதி (நாடு திரும்புவதால், அவர் 15ந்தேதி போலீஸ் விசாரணைக்கு ஆஜராக வேண்டும். இந்த நிபந்தனையுடன் லுக் அவுட் நோட்டீசுக்கு இடைக்கால தடை விதிக்கிறேன். வழக்கை ரத்து செய்யக்கோரும் மற்றொரு மனுவுக்கு போலீசார் பதில் மனு தாக்கல் செய்யவேண்டும். விசாரணையை வருகிற 28ந்தேதிக்கு தள்ளிவைக்கிறேன். அதுவரை எ.வ.வேலுவை கைது செய்யக்கூடாது என்று தடை விதிக்கவேண்டும் என்று மூத்த வக்கீல் பி.வில்சன் கோரிக்கை விடுத்தார். அதற்கு நீதிபதி, வருகிற 28ந்தேதி வரை எ.வ.வேலுவுக்கு எதிராக கடும் நடவடிக்கை போலீசார் எடுக்கக்கூடாது" என்று உத்தரவிட்டார்.

இந்த நிலையில், எ.வ.வேலுவுக்கு எதிரான லுக் அவுட் நோட்டீசுக்கு தடை விதித்த சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசு தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. தலைமை நீதிபதி சூர்யகாந்த் முன்னிலையில் ஆஜரான தமிழ்நாடு அரசு வழக்கறிஞர், அவசர வழக்காக நாளையே விசாரிக்க வேண்டும் என்று முறையிட்டார். இதனை ஏற்க மறுத்த தலைமை நீதிபதி, நாளை மறுநாள் விசாரணைக்கு எடுத்துக் கொள்வது குறித்து பரிசீலனை செய்வதாக தெரிவித்தார்.

# கல்வி நிலையங்களில் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு தடை கேட்ட வழக்கு தள்ளுபடி



சென்னை, ஜூலை 14

சென்னை ஐகோர்ட்டில், பரமசிவம் என்பவர் தாக்கல் செய்துள்ள பொது நல மனுவில், "தமிழ்நாட்டில் பள்ளிகள், கல்லூரிகளில் த.வெ.க. நிர்வாகிகள் நுழைந்து, தங்கள் கட்சித் தலைவரான முதல்அமைச்சர் விஜய்யை முன்னிலைப்படுத்துகின்றனர். விஜய் அண்ணா, விஜய் மாமா என்று மாணவர்களை கோஷம் போட வைக்கின்றனர்.

தேசிய தலைவர்களின் புகைப்படத்துடன் விஜய் படத்தையும் காட்சிப்படுத்துகின்றனர். அதுமட்டுமல்ல கல்வி நிறுவனங்களில் விஜய்யின் சினிமா பாடல்கள் பாடப்படுகின்றன. மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் இந்த சம்பவங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரச களுக்கும், குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்துக்கும் புகார்கள் அனுப்பியுள்ளேன்.

எனவே, கல்வி நிறுவனங்களில் அரசியல் பிரசாரங்களுக்கு தடை விதிக்க வேண்டும். இதுகுறித்து விதிமுறைகளை உருவாக்கவேண்டும். இதுபோன்ற அரசியல் நிகழ்ச்சிகளை அனுமதிக்கும் கல்வி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ஏற்கனவே இதே விவகாரம் தொடர்பாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்கில் அரசு பதிலளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒரே விஷயத்துக்காக ஏன் இத்தனை மனுக்கள் தாக்கல் செய்யப்படுகிறது? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், இந்த விவகாரத்தில் ஏற்கெனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, பள்ளிகளில் அரசியல் நிகழ்ச்சிகள் நடத்த தடை விதித்து கடந்த 10ம் தேதி சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதையடுத்து, மனுவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்ற நீதிபதிகள், மனுவை திரும்பப் பெற அனுமதித்து, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# மதுக்கடையை அகற்றக்கோரிய பள்ளி மாணவிகள் மீது தாக்குதல் நடத்துவதா? நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை, ஜூலை 14

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் கோடாலியில், டாஸ்மாக் கடையை மூடக்கோரி அறவழியில் போராடிய பள்ளி மாணவிகள் மீது தவெக அரசின் காவல்துறை காட்டுமிராண்டித்தனமான தடியடி நடத்தியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்தக் கொடூரத் தாக்குதலில் காயமடைந்த நான்கு பள்ளி மாணவிகள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நியாயமான கோரிக்கைக்காகப் போராடிய பெண் குழந்தைகளை தாக்கியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஆட்சியைக் கைப்பற்றியவுடன் பெண்களுக்குப் பாதுகாப்பு தருவோம் எனத் தேர்தல் களத்தில் முழங்கிய முதலமைச்சர் ஜோசப் விஜய், தற்போதைய அராஜகச் சம்பவத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்? தவெக ஆட்சியில் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு என்பது வெறும் காகித விளம்பரமே என்பதை கோடாலி கிராமத்தில் நடந்த இந்தக் கொடூரத் தடியடிச் சம்பவம் உலகிற்குத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

மதுவின் பிடியில் இருந்து தங்களைக் காக்கப் போராடிய பிஞ்சுக் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்திய காவல்துறை அதிகாரிகள் மீது தவெக அரசு உடனடியாகக் கடுமையான சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு உரிய உயர்தரச் சிகிச்சை வழங்குவதோடு, இதுபோல பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகில் இருக்கும் டாஸ்மாக் கடைகளை உடனடியாக மூட வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நில அபகரிப்பு புகார்: தா.மோ.அன்பரசன் மீது வழக்குப்பதிவு



சென்னை, ஜூலை 14

தன்னுடைய சொத்தை திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கடந்த 2 ஆண்டுகளாக சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ளதாக சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவன உரிமையாளர் ராஜேஷ் சோமசுந்தரம் முதல்அமைச்சரின் தனிப்பிரிவில் புகார் அளித்து இருந்தார்.

2024ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலின் போது பரங்கிமலையில் தேர்தல் பணிமனைக்காக கொடுத்த 5,500 சதுர அடி நிலத்தை திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திருப்பி தர மறுக்கிறார். அன்பரசனின் உதவியாளர் என்ற பெயரில் ஒருவர் வந்து கேட்டதன் பேரில் அந்த இடம் தரப்பட்டது. இதற்கென கட்டாயப்படுத்தி 6 மாத குத்தகை ஒப்பந்தமும் ஏற்படுத்தினர். ஆனால், குத்தகை காலம் முடிந்தும் இடத்தை காலி செய்து தரவில்லை. 2 ஆண்டுகளாக வாடகையும் தரவில்லை.

குத்தகை ஒப்பந்தம் சிலரது பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களை தொடர்பு கொள்ள முயற்சித்தபோது, அவர்கள் போலியாக முகவரி கொடுத்துள்ளது தெரிய வந்துள்ளது. தற்போது சட்டவிரோதமாக என்னுடைய நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். வாடகை கூட தராமல் இழுத்தடிக்கப்பட்ட நிலையில், கடந்த ஜூன் 19ம் தேதி முன்னாள் அமைச்சர் அன்பரசன் என்னை சந்தித்தார்.

அப்போது, ஒருவாரத்தில் அந்த நிலத்தை தன்னிடம் ஒப்படைக்குமாறும், பணம் கொடுத்து விடுவதாகவும் கூறினார். ஆனால் நிலத்தை விற்க எனக்கு விருப்பமில்லை. எனக்கு அந்த நிலம் தேவைப்படுகிறது என்று உறுதியாக தெரிவித்து விட்டேன். ஒரு வாரம் கழித்து பேசுவதாக கூறிச் சென்றவர், பிறகு எந்த பதிலும் கூறவில்லை. பல முறை தொடர்பு கொள்ள முயற்சித்தும், தொடர்பு கொள்ள முடியவில்லை. எனது நிலத்தை மீட்டுத்தரவேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த நிலையில், நில அபகரிப்பு புகார் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், அவரது உதவியாளர் ஜெய்சங்கர் மற்றும் பல்லாவரம் தாசில்தார் ஆறுமுகம் ஆகியோர் மீது பரங்கிமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லையில் பயங்கரம்: காதல் திருமணம் செய்த தொழிலாளி கொடூரக்கொலை; போலீசார் தீவிர விசாரணை



நெல்லை, ஜூலை 14

நெல்லையில் காதல் திருமணம் செய்த தொழிலாளியின் முகம் அடையாளம் தெரியாத அளவுக்கு சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு உள்ளார்.

நெல்லை டவுன்பாறையடி மந்திரமூர்த்தி தெருவை சேர்ந்தவர் குருநாதன். இவரது மகன் ஆவுடையப்பன் (வயது 37). பெயிண்டு அடிக்கும் தொழிலாளியான இவர் சில ஆண்டுகளுக்கு முன்பு சுதா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு மகன், மகள் உள்ளனர்.

இந்த நிலையில், நெல்லை டவுன்சங்கரன்கோவில் ரோட்டில் ஒரு கோவில் அருகே, ஆவுடையப்பன் நேற்று காலை நடந்து சென்று கொண்டு இருந்தார்.

அப்போது அங்கு பயங்கர ஆயுதங்களுடன் மர்ம நபர்கள் வந்தனர். அவர்கள் திடீரென்று ஆவுடையப்பனிடம் தகராறு செய்து, அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடி விட்டனர். இந்த சம்பவத்தில் ஆவுடையப்பனின் முகம் அடையாளம் தெரியாத அளவுக்கு சிதைக்கப்பட்டு இருந்தது.

இதனை அறிந்த நெல்லை டவுன் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். ஆவுடையப்பனின் உடலை பார்த்து மனைவி மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர்.

அவர்கள், கொலையில் ஈடுபட்ட மர்மநபர்களை கைது செய்யும் வரை உடலை எடுக்க விடமாட்டோம் எனக் கூறி சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். மர்மநபர்களை பிடிக்க போலீஸ் கமிஷனர் தேஷ்முக் சேகர் சஞ்சய் உத்தரவின்பேரில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

அவர்கள் மர்மநபர்களை தேடி வருகின்றனர். விரைவில் மர்மநபர்கள் கைது செய்யப்படுவார்கள் என போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் போலீசார் தெரிவித்தனர்.

இதில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து அவர்கள் கலைந்து சென்றனர். அதன் பின்னரே போலீசார் ஆவுடையப்பன் உடலை நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சாலை மறியலால் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த கொலை தொடர்பாக நெல்லை டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

முன்பகை காரணமாக இந்த கொலை நடந்ததா? அல்லது வேறு ஏதாவது காரணம் உள்ளதா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகிறார்கள். பாதுகாப்பு கருதி அந்த பகுதியில் போலீசாரும் குவிக்கப்பட்டு உள்ளனர்.

மோப்ப நாய்கள் அழைத்து வரப்பட்டு, தடயங்கள் சேகரிக்கப்பட்டன. சந்தேகத்திற்குரிய நபர்கள் 2 பேரை பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# மதுரை சாலை விபத்து: டிடிவி தினகரன் இரங்கல்



மதுரை, ஜூலை 14

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே நான்கு வழிச்சாலையில் அரசுப்பேருந்தும், ஆம்னி பேருந்தும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 6 பயணிகள் உயிரிழந்திருப்பதாகவும், 40க்கும் அதிகமானோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் உயரிய சிகிச்சைகள் வழங்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மதுரை மாவட்ட நிர்வாகத்தையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணை பகுதியில் மயங்கி கிடந்த குட்டி யானை சிகிச்சை பலனின்றி சாவு



ஈரோடு, ஜூலை 14

ஈரோடு மாவட்டம் டி.என்.பாளையம் வனச்சரகத்துக்குட்பட்ட குண்டேரிப்பள்ளம் அணை பகுதியில் வனத்துறையினர் நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு உடலில் காயங்களுடன் சுமார் 3 வயது ஆண் குட்டி யானை மயங்கி கிடந்தது. இதைப்பார்த்த வனத்துறை ஊழியர்கள் குட்டி யானையின் உடல்நிலை குறித்து அதிகாரிகளுக்கும், கால்நடை மருத்துவருக்கும் தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில் கால்நடை உதவி மருத்துவர் சதாசிவம் காயம் அடைந்த குட்டி யானையின் உடலில் இருந்த காயங்களுக்கு மருந்து போட்டு சிகிச்சை அளித்தார். இதைத்தொடர்ந்து மருத்துவர் மற்றும் வனத்துறையினர் குட்டி யானையின் உடல்நிலை குறித்து கண்காணித்து வந்தனர்.

இந்தநிலையில்சிகிச்சை பெற்றுவந்த குட்டியானை உடல்நலம் தேறிவிடும் என்று எதிர்பார்த்த நிலையில் நேற்று இரவு சுமார் 8.30 மணி அளவில் சிகிச்சை பலனின்றி திடீரென உயிரிழந்தது. இதையடுத்து குட்டி யானையின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

குட்டி யானையின் உடலில் காயங்கள் இருந்ததால் வேறு ஏதாவது விலங்குகள் குட்டியானையை தாக்கியதா? என்று பிரேத பரிசோதனையின் அறிக்கை கிடைத்த பிறகே தெரியவரும் என்று கால்நடை மருத்துவர் தெரிவித்தார்

அதன்பின்னர் குட்டி யானையின் முகத்தில் இருந்த சுமார் 1 அடி நீளமுள்ள 2 தந்தங்கள் வெட்டி எடுக்கப்பட்டன. பின்னர் வனப்பகுதியில் குட்டி யானையின் உடல் புதைக்கப்பட்டது.

# மு.க.ஸ்டாலினுக்கு எப்போது கோபம் வருகிறதோ? அப்போது தவெக ஆட்சி இருக்காது: ராஜேந்திர பாலாஜி



சிவகாசி, ஜூலை 14

சிவகாசியில் அதிமுக முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி பேசியதாவது:

தி.மு.க.வை எதிர்த்து அரசியல் செய்தவர்கள் அ.தி.மு.க.வினர். தற்போது ஆட்சியில் உள்ள கட்சி நேற்று முளைத்த காளான். இதை அ.தி.மு.க.வினர் ஊதி தள்ளிவிடுவார்கள். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. நிர்வாகிகளும், கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கடுமையாக தேர்தல் பணியாற்றினார்கள். ஆனால் இந்த தொகுதிக்கு சம்பந்தம் இல்லாதவர் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

த.வெ.க.வுக்கு மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்றால் அந்த கட்சி தமிழகத்தில் 150 இடங்களில் வெற்றி பெற்று இருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு முழு வெற்றி கிடைக்கவில்லை. இந்த வெற்றி நிலையான வெற்றி கிடையாது. த.வெ.க.வினர் ஆசைவார்த்தை கூறி மாற்று கட்சி தொண்டர்களையும், நிர்வாகிகளையும் அழைக்கிறார்கள். இதற்கு ஆசைப்பட்டு சிலர் இங்கிருந்து சென்று விட்டார்கள். அவர்கள் சென்றதால் அ.தி.மு.க. அழிந்து விடுமா?. அ.தி.மு.க.வில் இருந்து வெளியேறியவர்கள் விரைவில் தாய் கழகமான அ.தி.மு.க.வில் இணைவார்கள். முதல்அமைச்சர் பதவியில் உள்ள விஜய், முன்னாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை கன்னியகுறைவாக பேசக்கூடாது. மு.க.ஸ்டாலினுக்கு எப்போது கோபம் வருகிறதோ? அப்போது தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி இருக்காது. அவருக்கு கோபம்வரணும்.வரும்.. அதுவரை உங்கள் ஆட்சி நீடிக்கும். முதல் அமைச்சர் விஜய் கரூரில் பேசியதை மக்கள் ரசிக்கவில்லை. தமிழகத்தை பல முதல்அமைச்சர் ஆட்சி செய்துள்ளார்கள். அவர்கள் இப்படி நடந்து கொள்ளவில்லை. ஆனால் விஜய் கரூரில் நடந்து கொண்ட விதம் வருத்தம் அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடங்கியது

சென்னை, ஜூலை 14

நடப்பு கல்வியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு இன்று காலை தொடங்கியது. முதல் நாளான இன்று அரசு பள்ளியில் பயின்ற 7.5% உள்ஒதுக்கீட்டு பிரிவு மாணவர்களுக்கு கலந்தாய்வு நடைபெற்று வருகிறது. 38 இடங்கள் உள்ள விளையாட்டு வீரர்கள் பிரிவில் 504 பேர் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகளுக்கான 150 இடங்களுக்கு 14 பேர் பங்கேற்றுள்ளனர். மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான கல்லூரி, பாடப்பிரிவு ஆகியவற்றை காலை 10 மணி முதல் தேர்வு செய்யலாம் என்றும் தேர்வு செய்த கல்லூரிக்கான ஒதுக்கீட்டு ஆணை ஜூலை 15 காலை 7 மணிக்கு வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஒதுக்கீட்டு இடங்களை நிரப்புவதற்கான கலந்தாய்வு இன்று முதல் ஆகஸ்ட் 30ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 20ம் தேதி முதல் 30ம் தேதி வரை 40 நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மின் தடையால் தண்ணீர் பாய்ச்ச வழியின்றி காய்ந்து வரும் நெற்பயிர்கள்: விவசாயிகள் வேதனை

தஞ்சாவூர், ஜூலை 14

காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆழ்துளை கிணறு வசதி உள்ள விவசாயிகள் முன்பட்ட குறுவை சாகுபடி செய்துள்ளனர். ஏப்ரல் மாதத்தில் நாற்று விட்டு நடவு செய்த முன்பட்ட குறுவை பயிர்கள் தற்போது கதிர் வந்து காணப்படுகின்றன. சில இடங்களில் மே மாதத்தில் நடவு செய்யப்பட்ட முன்பட்ட குறுவை நெற்பயிர்கள் கதிர் வரும் தருணத்தில் உள்ளன.

பூதலூர் அருகே மரத்தகுடி என்ற பகுதியில் சில விவசாயிகள் ஆழ்துளை கிணறு தண்ணீரை பயன்படுத்தி முன்பட்ட குறுவை சாகுபடி செய்திருந்தனர். கடுமையான வெயில் மற்றும் காற்று காரணமாக தினந்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய சூழல் எழுந்துள்ளது.



தொடர்ந்து சில நாட்களாக மின்தடை ஏற்பட்டதால் தண்ணீர் பாய்ச்ச வழியின்றி நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன. நடவு செய்யப்பட்ட நெல் வயல்கள் காய்ந்து வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. மின் தடை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்காததால் இந்த நிலை ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மேட்டூர் அணை திறப்பது தற்போது சாத்தியமில்லாத சூழலில் ஆழ்துளை கிணற்று பாசனத்துக்கும் மின் தடையால் பாதிப்பு ஏற்படுவதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

## நீலகிரி: தேயிலை தோட்டத்துக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம்



நீலகிரி, ஜூலை 14

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே சேரம்பாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட சேரம்பாடி, சோலாடி, கண்ணம்பள்ளி, கோரஞ்சால், சப்பந்தோடு, புஞ்சகொல்லி உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து வாழை, தென்னை, பாக்கு மரங்கள், பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. மேலும் பொதுமக்கள், மாணவர்களை விரட்டி வருகிறது. காட்டு யானைகள் நடமாட்டத்தால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் சேரம்பாடியில் இருந்து பந்தலூர் செல்லும் சாலையில் 5 காட்டு யானைகள் முகாமிட்டது.

அந்த வழியாக சென்ற வாகனங்களை வழிமறித்தது. இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து காட்டு யானைகள் காப்பி காடு பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்திற்குள் புகுந்தன. இதனால் தொழிலாளர்கள் பீதி அடைந்தனர். தகவல் அறிந்த சேரம்பாடி வனச்சரகர் சஞ்சீவி, வனவர் முத்தமிழ் மற்றும் வனத்துறையினர் காட்டு யானைகளை விரட்டினர். இதேபோல் அய்யன்கொல்லி அருகே தட்டாம்பாறை, கருத்தாடு, கோட்டப் பாடி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு 8 காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்தது. இதை அறிந்த வனத்துறையினர் யானைகளை விரட்டினர்.

## மனைவி இறந்த துக்கத்தில் தொழிலாளி தூக்குப்போட்டு தற்கொலை

தூத்துக்குடி, ஜூலை 14

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு அருகே உள்ள ஆசூர் கிராமத்தில் நடுத்தெரு முத்துப்பாண்டி மகன் கருப்பசாமி (37 வயது). கட்டிட தொழிலாளி. இவரது மனைவி செல்லத்தாய். இவர்களுக்கு கார்த்திகா, சுமித்ரா ஆகிய 2 மகளும், அருண் என்ற மகனும் உள்ளனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு செல்லத்தாய் இறந்து விட்டார். இதைத் தொடர்ந்து 3 குழந்தைகள் மற்றும் வயதான தாயார் தங்கமாரியம்மாளுடன் வசித்து வந்தார். மனைவி இறந்தது முதல் கருப்பசாமி மனமுடைந்து காணப்பட்டுள்ளார்.

நேற்று காலையில் வீட்டில் குழந்தைகளுடன் டீ குடித்துவிட்டு கருப்பசாமி வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்துள்ளார். அவரது தாயார் வயல் வேலைக்கு சென்றுள்ளார். சிறிது நேரத்தில் குழந்தைகளும் வெளியே சென்றுள்ளனர். அப்போது வீட்டில் தனியாக இருந்த கருப்பசாமி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். சிறிது நேரம் கழித்து வெளியே சென்ற குழந்தைகள் வீட்டிற்கு திரும்பி வந்துள்ளனர். கதவு அடைக்கப்பட்டு இருந்ததைப் பார்த்த குழந்தைகள், ஜன்னல் வழியாக பார்த்துள்ளனர். அப்போது கருப்பசாமி தூக்கில் தொங்கியதை பார்த்து குழந்தைகள் கதறி அழுதுள்ளனர்.

அவர்களின் அழுகுரல் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர் கதவை உடைத்து உள்ளே சென்று, அவரது உடலை கீழே இறக்கினர். இதுகுறித்த புகாரின் பேரில் கயத்தாறு போலீசார் அந்த வீட்டிற்கு சென்று, அவரது உடலை கைப்பற்றி நெல்லை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாய், தந்தையரை இழந்த நிலையில் 3 குழந்தைகளும் பரிதவித்து வருகின்றனர். இந்த சம்பவம் அந்த கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 75.65 அடியாக குறைந்தது

சேலம், ஜூலை 14

தென்மேற்கு பருவ மழை இந்த ஆண்டு கை கொடுக்காத நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து வருகிறது. அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாததால் கடந்த மாதம் 12ந் தேதி டெல்டா பாசனத்திற்கு திறக்க வேண்டிய மேட்டூர் அணை இன்று வரை திறக்கப்படவில்லை. இதனால் இந்த ஆண்டு டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஜூன் மாதம் முதல் ஜனவரி வரை டெல்டா பாசனத்திற்கு தண்ணீரை அளிக்கும் மேட்டூர் அணையில் இருந்து தற்போது குடிநீர் தேவைக்காக மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது.



நேற்று காலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 75.65 அடியாக குறைந்துள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 91 கனஅடியாகவும், அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்படுகிறது.

## கள்ளக்காதல் விவகாரம்; குடும்பத்தினரை தவிக்க விட்டு 17 வயது சிறுவனுடன், பெண் தற்கொலை

லால்குடி ஜூலை 14

திருச்சி அருகே கள்ளக்காதல் விவகாரத்தில் 17 வயது சிறுவனுடன் பெண் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருச்சி மாவட்டம், லால்குடி அருகே மணக்கால் பகுதியில் ரெயில்வே கேட் உள்ளது. திருச்சியின் லால்குடி மற்றும் காட்டூர் பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சென்னையில் இருந்து திருச்சி நோக்கி கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில் சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்தவழியே சென்ற 2 பேர் அந்த ரெயில் முன்பு திடீரென்று பாய்ந்தனர். இதில், பலத்த காயமடைந்து அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த கடலூர் மாவட்டம் விருத்தாசலம் ரெயில்வே இன்ஸ்பெக்டர் பிருந்தா சம்பவ இடத்திற்கு வந்து, இறந்து கிடந்தவர்களின் உடல்களை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார்.

போலீசாரின் முதல் கட்ட விசாரணையில், இறந்தவர்கள் திருச்சி மாவட்டம், சோமரசம் பேட்டையை அடுத்துள்ள போதாவூர் கிராமத்தை சேர்ந்த புவனேஸ்வரி (வயது 26) மற்றும் திருச்சியை சேர்ந்த 17 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. மேலும் புவனேஸ்வரிக்கு திருமணமாகி 9 வயதில் ஒரு மகளும், 7 வயதில் ஒரு மகனும் உள்ளனர்.

புவனேஸ்வரிக்கும், அவரது உறவினரான திருச்சியை சேர்ந்த 17 வயது சிறுவனுக்கும் பழக்கம் ஏற்பட்டு, கள்ளக்காதலாக மாறியுள்ளது. அந்த சிறுவன் ஒரு கல்லூரியில் பட்டய படிப்பு படித்து வந்தார். இவர்களது கள்ளக்காதல் விவகாரம் இருவரது குடும்பத்தினருக்கும் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் அந்த சிறுவன் கடைக்கு பொருட்கள் வாங்க செல்வதாக தனது பெற்றோரிடம் கூறிவிட்டு சென்றுள்ளார்.

அதேபோல், புவனேஸ்வரி திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள பூண்டி மாதா ஆலயத்துக்கு சென்று வருவதாக தனது கணவரிடம் கூறிவிட்டு சென்றார்.

இதையடுத்து அவர்கள் 2 பேரும் மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றியுள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் இரவு மணக்கால் ரெயில்வே கேட் பகுதிக்கு அவர்கள் வந்தனர். அங்கு மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, அந்த வழியாக வந்த ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர் என்பது விசாரணையில் தெரியவந்தது. ஆனால் அவர்கள் தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் என்ன? என்பது தெரியவில்லை.

இதையடுத்து 2 பேரின் உடல்களை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக லால்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து இன்ஸ்பெக்டர் பிருந்தா வழக்குப்பதிவு செய்து கள்ளக்காதல் ஜோடி தற்கொலை செய்து கொண்டது ஏன்?

என்பது குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

## 6 மாதங்களில் மு.க.ஸ்டாலின் முதல்அமைச்சர் ஆவார்: அனிதா ராதாகிருஷ்ணன் சூளுரை

தூத்துக்குடி, ஜூலை 14

மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள வல்லநாட்டில் நேற்று நடைபெற்றது. இதில், திமுக எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் அனிதா ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

சிலர் நமது தலைவர்களை பற்றி கேவலமாக பேசுவது; திமுகவில் உள்ளவர்களை கைது செய்வது என மிரட்டி பார்க்கிறார்கள். திமுகவை தொட்டு பார்க்க முடியுமா?. விஜய் எந்த வகையில் முதல்அமைச்சராக வந்தார்?. அவர் எம்ஜிஆரை குறிப்பிடுகிறார்.



எம்ஜிஆரும் அவரும் ஒன்றா?. சினிமா நடிக்கும் போது விஜய் என்பது அரசியலுக்கு வந்ததும் ஜோசப் விஜய் என்பது. திருச்சி தேவாலயத்திலே முட்டி போட்டு நடப்பது. எம்.ஜி.ஆ.ரை பற்றி பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது.

அதேபோல, தற்போது விஜய்யா ஆட்சி நடத்துகிறார்?. லாட்டரி வியாபாரி ஆதவ் அர்ஜுனா தான் ஆட்சியை நடத்துகிறார். எவ்வளவு நாட்கள் இந்த ஆட்சி நடைபெறும் என்று நான் குறிப்பிட்டு சொல்கிறேன். 6 மாத காலத்திற்கு இந்த ஆட்சி போகவில்லை என்று சொன்னால் பார்ப்போம். 6 மாதத்தில் தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வருவார். திருச்சி சிவா போன்றவர்கள் எல்லாம் மத்தியில அமைச்சராக அமர்வார்கள். அந்தகாலம் வரும்போது, சினிமாவில் நடிக்கும் போது முதல்அமைச்சர் விஜய் என்னென்ன தப்பு செய்தார்? என்பது எல்லாம் வெளியே வரும்.

என்னை ஜெயிலில் பிடித்து போட்டால் எல்லாம் முடிந்து விட்டது என்று அர்த்தமா.? அந்த அம்மாவும் தான் என்னை பிடித்து போட்டார் 37 நாட்கள் திருச்சி சிறையில் அடைத்தார். இப்போது, இவரும் என்னை பிடித்து போட்டு மிரட்டலாம் என்று நினைத்தார் அது நடக்குமா?. காவல்நிலையத்தில், "நீங்க எம்.எல்.ஏ. பதவிய ராஜினாமா செய்யுங்கள் உங்களை மந்திரி ஆக்குவோம் என கூறினார்கள், அதற்கு நான் மந்திரியாவது கிந்திரி ஆவது என கூறிவிட்டு என்று நான் சம்மதிக்கவில்லை. யார் என்ன செய்தாலும் எங்கள் கழகத்தை அசைத்துக் கூட பார்க்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பாம்பன் பழைய தூக்குப்பாலத்தின் ஒரு பகுதி அகற்றம்

ராமநாதபுரம், ஜூலை 14

பாம்பன் கடலில் 1914ல் அமைக்கப்பட்ட பாம்பன் ரயில் பாலத்தின் நடுவில் உள்ள தூக்கு பாலம் பலமிழந்ததால் 2022ல் அதன் வழியாக நடந்த ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதன் பின் புதிய ரயில் பாலம் அமைக்கப்பட்டு 2025 ஏப்., 6ல் ரயில் போக்குவரத்து துவங்கியது.



இதையடுத்து பழைய ரயில் தூக்கு பாலத்தை பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டதால் அகற்ற டெண்டர் விடப்பட்டது. தற்போது தூக்கு பாலத்தை அகற்றும் பணி நடந்து வருகிறது. இந்நிலையில் தற்போது தூக்குப் பாலத்தின் ஒரு பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இன்னும் சில வாரங்களில் தூக்கு பாலம் முழுவதும் அகற்றப்படும் என ஊழியர்கள் தெரிவித்தனர்.


## ராமேஸ்வரத்தில் திடீரென உள்வாங்கிய கடல்.!

தனுஷ்கோடி ஜூலை 14

ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடலில் நேற்று கடல் உள்வாங்கி காணப்பட்டது.

இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணிய தலங்களில் ஒன்றாக ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இதனிடையே சனி, ஞாயிறு 2 நாட்கள் தொடர் விடுமுறையை தொடர்ந்து நேற்று ராமேஸ்வரம் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது.

இவ்வாறு வந்த பக்தர்கள் அக்னி தீர்த்த கடலில் புனித நீராடுவதிலு இருந்தனர். கடலில் புனித நீராடிய பக்தர்கள் கடற்கரையில் அமர்ந்து இறந்து போன தங்களது முன்னோர்களுக்கு திதி தர்ப்பணம் பூஜை செய்தனர்.



தொடர்ந்து கோவிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் புனித நீராடினர்.

மேலும் பக்தர்கள் கோவிலில் சாமி தரிசனம் செய்ய ரூ.100, ரூ.200 இலவச தரிசன பாதையிலும்,

பொது தரிசன பாதையிலும் நீண்ட வரிசையில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக காத்திருந்து தரிசனம் செய்து சென்றனர். அதேபோல் ராமேசுவரம் கோவிலோடு சேர்ந்த ராமர்பாதம், தனுஷ்கோடி செல்லும் சாலையில் உள்ள கோதண்டராமர் கோவிலிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது.

கோவிலுக்கு வந்த பக்தர்கள் பலரும் புயலால் அழிந்து போன தனுஷ்கோடி கம்பிப்பாடு கடற்கரை மற்றும் அரிச்சல் முனை கடற்கரை பகுதிக்கு சென்று கடலின் அழகை பார்த்து ரசித்து சென்றனர். இதனால் தனுஷ்கோடியிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாககாணப்பட்டது.

இதற்கிடையே ராமேசுவரம் அக்னி தீர்த்த கடல் பகுதியில் நேற்று காலை வழக்கத்திற்கு மாறாக பல அடிதூரத்திற்கு உள்வாங்கி காணப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் கடலில் உள்ள பாசி, பாறைகள் தெளிவாக வெளியே தெரிந்தன. நேற்று அக்னி தீர்த்த கடலில் புனித நீராட வந்த பக்தர்கள் கடல் உள்வாங்கி இருந்ததால் புனித நீராட சிரமப்பட்டனர். மேலும் அங்கு வந்த பக்தர்கள் கடல் உள்வாங்கியதை ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். செல்போனில் புகைப்படம், வீடியோ எடுத்தனர்.

காலை 9 மணி வரை உள்வாங்கி இருந்த கடலானது அதன் பிறகு நேரம் செல்ல செல்ல மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியது. காற்று காலத்தில் அக்னி தீர்த்த கடல் மற்றும் துறைமுக பகுதியில் கடல் உள்வாங்குவதும், இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமான ஒன்று தான் என மீனவர்கள் தெரிவித்தனர்.

## மதுரை அருகே அரசு பஸ் மீது ஆம்னி பஸ் மோதி பயங்கர விபத்து: 5 பேர் பலி



மதுரை, ஜூலை 14

சென்னையில் இருந்து மார்த்தாண்டத்துக்கு தனியார் ஆம்னி பஸ் ஒன்று நேற்று புறப்பட்டது. இந்த பஸ்சில் ஏராளமான பயணிகள் பயணம் செய்தனர். இந்த நிலையில், இன்று அதிகாலை மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே வண்டிநகரம் பகுதி நான்குவழிச்சாலையில் ஆம்னி பஸ் சென்று கொண்டிருந்த போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் மதுரையில் இருந்து திருச்சி சென்று கொண்டிருந்த அரசு பஸ் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

அரசு பஸ் மீது மோதிவிட்டு இடது பக்கம் திரும்பி சாலையோரம் உள்ள பயணிகள் நிழற்குடையில் ஆம்னி பஸ் மோதி சுக்குநூறானது. இதில் ஆம்னி பஸ்சின் முன்பகுதி பலத்த சேதமடைந்தது. அரசு பஸ் தலைக்குப்புற கவிழ்ந்தது. விபத்து குறித்து தகவலறிந்த கொட்டாம்பட்டி போலீசார் மற்றும் மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இரு பஸ்களிலும் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் இரு பஸ்களிலும் பயணித்த 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

4 ஆண்கள், 1 பெண் என 5 பேர் உயிரிழந்துள்ளனர். குழந்தைகள் உட்பட 42 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து கொட்டாம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதிகாலையில் நடந்த இந்த கோர விபத்து அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அ.தி.மு.க.விற்கு திரும்பி வந்தால் ஜீரோவில் இருந்து மீண்டும் அரசியல் வாழ்க்கை: எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்

சேலம், ஜூலை 14

சேலத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.வுக்கு பிரிந்து சென்றவர்கள் அங்கு எப்படி இருக்கிறார்கள்? என்பது அனைவருக்கும் தெரியும். என்னை எப்போது வேண்டுமானாலும் வந்து சந்திக்கலாம். ஆனால் தி.மு.க. தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் த.வெ.க. தலைவரை அவர்களால் சுலபமாக பார்க்க முடியாது. ஆட்சி, காட்சிகள் மாறும்போது, நம்மிடம் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். அவ்வாறு வந்தால் அவர்கள் ஜீரோவில் இருந்து தான் அவர்களது அரசியல் பயணம் தொடங்கப்படும்.

தேர்தலில் தி.மு.க. தலைவர் உள்ளிட்ட சில அரசியல் கட்சி தலைவர்கள் வெற்றி பெறமுடியவில்லை. த.வெ.க.தலைவர் விஜய் அவர் மீது நம்பிக்கை இல்லாமல் 2 தொகுதிகளில் போட்டியிட்டார். ஆனால் எடப்பாடி தொகுதியில் நான் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளேன், என்றார்.

மேலும் பேசிய எடப்பாடி பழனிசாமி கூறியதாவது: பேரறிஞர் அண்ணா, புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் உருவ படங்களை வைத்து த.வெ.க. தலைவர் விஜய் ஊர், ஊராக சென்று மக்களை சந்தித்தார். நமது தலைவர்களை வைத்து வெற்றி பெற்றுள்ளதால் அது உண்மையான வெற்றியாக கருதமுடியாது. ஜனநாயகன் படத்தயாரிப்பாளருக்கு டெல்லி சிறப்பு பிரதிநிதியாவும், அவருக்கு ஆலோசகருக்கு தமிழ்நாடு அரசின் ஆலோசகராகவும் பதவி வழங்கப்பட்டுள்ளது. சொல்லபோனால் முதல்அமைச்சருக்கு மேக்கப் போடும் நபருக்கும் வரும் நாட்களில் பதவி கொடுப்பார்கள்?. த.வெ.க. ஆட்சிக்கு வந்து 60 நாட்களில் தி.மு.க. ஆட்சியில் இருந்ததுபோல் கொலை, கொள்ளை, போதைப்பொருட்கள் நடமாட்டம் அதிகமாக நடந்து வருகிறது.

தேர்தலில் வெற்றி பெற மாட்டோம் என நினைத்து ஏராளமான வாக்குறுதிகளை விஜய் அள்ளி வீசினார். தற்போது நிதியில்லாமல் விழி பதுங்கி நிற்கிறார். த.வெ.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரவில்லை. தி.மு.க. கூட்டணி கட்சிகளின் உதவியுடன் ஆட்சி நடந்து வருகிறது. அவர்கள் எப்போது வேண்டுனாலும் காலை வாறிவிடுவார்கள். அப்போது இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும். எனவே, விரைவில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் மற்றும் அதன்பிறகு வரும் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெறும். எனவே, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து கட்சி பணியாற்ற வேண்டும்" என்றார்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
14.07.2026

# வி.சி.க.வை பலவீனப்படுத்த நினைத்தவர்கள் ஏமாந்து போனார்கள்: திருமாவளவன் தாக்கு

தர்மபுரி, ஜூலை 14

தர்மபுரியில் நடந்த திருமண விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டு பேசியதாவது:நான் ஒருபோதும் கட்சியிலிருந்து யாரையும் வெளியேற்ற வேண்டும் என்று எண்ணியதில்லை.சிலர்வி.சி.க.வைஎப்படியாவது சிதறடிக்க வேண்டும். பலவீனப்படுத்தி விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருந் தார்கள். அவர்கள் இப்போது ஏமாற்றம் அடைந்து இருக்கிறார்கள்.

ஒருவர் நம் கட்சிக்கு வருகிறார் என்று சொன்னால், அவரிடம் என்ன சொல்லியிருக்க வேண்டும். எங்களுடன் திருமாவளவன் நீண்ட காலமாக இணைந்து பணியாற்றியுள்ளார். நாளை வி.சி.க. எங்களுக்கு தேவை. நீங்கள் எங்கள் கட்சிக்கு வர வேண்டாம். வேறு கட்சிக்கு செல்லுங்கள் என்று சொல்லி இருக்க வேண்டும். அதுதான் அரசியல் அறம். எங்களாலும் வி.சி.க.வை பலவீனப்படுத்த முடியும் என்ற நோக்கில் கட்சியில் இணைத்துக் கொண்டார்கள்.

நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட இயக்கம் எடுத்த முடிவு என் இதயத்தில் முள் குத்தியதை போல் வலியை ஏற்படுத்தியது. லட்சக்கணக்கான தொண்டர்கள் கொண்ட இந்த இயக்கத்தில் நூற்றுக்கணக்கான கருத்தியல் சார்ந்த படை தளபதிகள் வலிமையுடனும் பற்றுதலுடனும் இருக்கிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# சென்னையில் விமானம் தரையிறங்கிய போது பறவை மோதி விபத்து



சென்னை, ஜூலை 14

பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் லண்டனில் இருந்து 224 பயணிகள், 12 விமான ஊழியர்களுடன் சென்னை வந்தது. சென்னையில் தரையிறங்கும்போது சுமார் 500 அடி உயரத்தில் பறவை மோதி என்ஜின் பகுதியில் சிக்கியது. விமானி சாமர்த்தியமாக தரையிறக்கியதால் விமானத்தில் இருந்த 236 பேரும் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர்.

பறவை மோதிய பகுதியை ஆய்வு செய்து பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் பாதுகாப்பு சோதனை நடத்தப்பட்டது. சுமார் 2 மணி நேர ஆய்வுக்கு பின் லண்டன் விமானம் ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து சென்னை லண்டன் செல்ல தயாராக இருந்த பயணிகள் ஓட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முழு ஆய்வுக்கு பின்னரே பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (14.07.2026)

**மேஷம்**: உங்களது அழகான தோற்றமும் பேச்சும் மற்றவர்களை எளிதில் ஈர்க்கும். பணியிடத்தில் நீங்கள் செய்யும் கடின உழைப்பு எதிர்காலத்தில் பெரிய பலனைத் தரும். தேவையற்ற பண விரயங்களைத் தவிர்க்க இன்று செலவுகளில் கொஞ்சம் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.

**ரிஷபம்**: நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன காரியங்கள் இன்று சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் அல்லது புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடித்தால் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலைத் தக்க வைக்கலாம்.

**மிதுனம்**: வேலைப்பளு சற்று அதிகமாகத் தோன்றினாலும், உங்கள் உழைப்பிற்கேற்ற நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளைத் திட்டமிடும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.

**கடகம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியான மற்றும் சுப நிகழ்ச்சிகள் பற்றிய பேச்சுகள் வரலாம். வீடு, நிலம் சார்ந்த சொத்து விவகாரங்களில் சாதகமான திருப்புமுனை ஏற்படும். மன அமைதியும் தைரியமும் கூடும் நாளாக அமையும்.

**சிம்மம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் அல்லது பதவி உயர்வுக்கான அறிகுறிகள் தென்படும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு உங்களுக்குப் பக்கபலமாக இருக்கும். வாகனப் பயணங்களின் போது கவனமாக இருப்பது அவசியம்.

**கன்னி**: பொருளாதார நிலை உயரும், பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நீங்கள் போடும் புதிய திட்டங்கள் வெற்றியைத்தரும். உறவினர்களுடனான கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும்.

**துலாம்**: இன்று நீங்கள் எதையும் சாதிக்கும் துணிச்சலோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள், அதற்குரிய பலனும் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: சந்திராஷ்டமம் இன்று உங்கள் ராசிக்கு சந்திராஷ்டமம் இருப்பதால் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நாள். புதிய தொழில் முதலீடுகள், முக்கிய ஒப்பந்தங்கள் மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது தேவையற்ற வாக்குவாதங்களை எக்காரணம் கொண்டும் வளர்க்க வேண்டாம்.

**தனுசு**: உங்களது முயற்சிகளுக்கு இருந்த தடைகள் அனைத்தும் விலகும். கடன் தொல்லைகள் குறைந்து நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்களுடன் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி, இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

**மகரம்**: குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆதரவும் ஆசியும்உங்களுக்குக்கிடைக்கும்.பணியிடத்தில் சவாலான வேலைகளையும் உங்கள் சமயோசித புத்தியால் எளிதாக முடிப்பீர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**: தொழிலில் நல்ல முன்னேற்றமும், கீழ்நிலை ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசாங்க வழியில் எதிர்பார்த்த உதவிகள் சாதகமாக முடியும். ஆரோக்கியத்தில் சிறு கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**: வாக்கு வன்மையால் பல காரியங்களை இன்று சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# அண்ணாமலையின் ஆரோக்கியமான கருத்துகளை ஏற்கிறோம்' அமைச்சர் விக்னேஷ் பேட்டி



சென்னை, ஜூலை 14

பழனி அருகே உள்ள கோரிக்கடவு கிராமத்தில் த.வெ.க. சார்பில் கூட்டம் நடந்தது. இதில் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ் கலந்து கொண்டார். பின்பு அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:வியட்நாம் விபத்தில் பலியான பழனியை சேர்ந்த முருகபிரபுவின் உடலை கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பழனி முருகன் கோவில் கட்டுப்பாட்டிலுள்ள நிலத்தை மோசடியாக பதிவு செய்ததாக செய்திகள் வந்தன. எனவே இன்று கூட (அதாவது நேற்று) அறநிலையத்துறை அமைச்சரிடம் செல்போனில் பேசினேன்.

அப்போது, கோவில் நில மோசடி செய்தவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுத்து, அந்த நிலங்கள் மீட்கப்படும் என அவர் கூறியுள்ளார். தவறு யார் செய்திருந்தாலும் தண்டனை வழங்கப்படும்.தமிழகத்தில் முதற்கட்டமாக 717 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன. இதனால் அரசுக்கு நிதிச்சுமை இருந்தது. தற்போது அதை நிவர்த்தி செய்து வருகிறோம். எனவே அடுத்தகட்டமாக மக்களுக்கு பாதிப்புள்ளடாஸ்மாக்கடைகளை மூட முக்கியத்துவம் கொடுக்கப்படும். அரசியல் கட்சிகளுக்கு நிதி கொடுத்து செயல்பட்டு வந்த பார்கள் தான் மூடப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இதற்காக கலெக் டர் உள்ளிட்ட உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.பின்பு, அண்ணாமலை நடத்தும் 'வீதி லீடர்ஸ்' அமைப்புக்கு அதிகமாக இளைஞர்கள் செல்கிறார்கள், எனவே அவரின் மாநாடு குறித்து தங்களின் கருத்து என்ன? என அமைச்சரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.அதற்கு, அவர் இது ஜனநாயக நாடு. கரூரில் கோவில் நிலம் வழங்கப்பட உள்ள விவகாரத்தில் கூட அண்ணாமலை தமிழக அரசை பாராட்டியுள் ளார். எனவே அண்ணாமலையின் ஆரோக்கியமான கருத்துகளை ஏற்கிறோம். யாரையும் எதிரியாக பார்க்கவில்லை, தீயசக்தியை தவிர, என்றார்.

# தமிழக சட்டசபை தேர்தலில் ஓட்டுப்போட்ட இலங்கை தம்பதி கைது

சென்னை, ஜூலை 14

இலங்கையாழ்ப்பாணத்தைசேர்ந்தவர்குணேஸ்வரன் (வயது 69). இவர் சென்னை தியாகராயநகரில், கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தனது மனைவி நாகுலாம்பிகையுடன் (60) வசித்து வந்தார். அங்கு சிறிய அளவில் நகைக்கடை ஒன்றையும் வைத்துள்ளார். இவரது மகள் மற்றும் குடும்பத்தினர், இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழ்கிறார்கள். இலங்கை பாஸ்போர்ட்டில் தமிழகத்தில் தங்கியிருந்த இவர், வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை வாங்கி வைத்திருந்ததாக தெரிகிறது.

அதை பயன்படுத்தி சமீபத்தில் நடந்து முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் ஓட்டுபோட்டுள்ளார். இது கண்டு பிடிக்கப்பட்டு, மாம்பலம் போலீஸ் நிலையத்தில் இவர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது. அதன்பேரில், இவர்கள் இருவர் மீதும் 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். நேற்று முன்தினம் இவர்கள் இருவரும் இலங்கை செல்வதற்காக, சென்னை விமான நிலையம் சென் றுள்ளனர். அப்போது இவர்கள் தமிழக வாக்காளர் அடையாள அட்டை வைத்திருந்ததை விமான நிலைய அதிகாரிகள் கண்டுபிடித்து போலீசில் புகார் கொடுத்துள்ளனர்.

# ராஜினாமா செய்யும் எம்.எல்.ஏ.க்களிடம் விளக்கம் கேட்க வேண்டும்: கவர்னருக்கு கிருஷ்ணசாமி கடிதம்




சென்னை, ஜூலை 14

புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் டாக்டர் கிருஷ்ணசாமி, கவர்னர் அர்லேகருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் எம்.எல்.ஏ.க்கள் ஒவ்வொருவராக தங்களது பதவிகளை திடீரென ராஜினாமா செய்வதும், பின்னர் ஆளும் கட்சியில் இணைவதும் ஒரு தொடர் கதையாகி வருகிறது. இதுவரை 6 பேர் ராஜினாமா செய்துள்ளனர்.

இதனை குதிரை பேரமாக கருத வேண்டும். ராஜினாமா செய்த ஒவ்வொரு எம்.எல்.ஏ.க்களிடமும் கவர்னராகிய நீங்கள் தலையிட்டு,அவர்களைநேரில்அழைத்து விளக்கம் கேட்க வேண்டும். அந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தக்கூடாது என இந்திய தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைக்க வேண்டும். மாஞ்சோலை தேயிலை தோட்ட தொழிலாளர்களின்வாழ்வுரிமையைமீட்டெடுக்க உங்களுக்கான சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும்.

சாதிவாரி மககள் தொகை கணக்கெடுப்பிற்கு முன்னதாகவே, தேவேந்திர குல வேளாளர்களை பட்டியல் பிரிவிலிருந்து வெளியேற்றுவதற்கான பரிந்துரைகளை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மெக்கல்லம் அவுட்... உள்ளே வரும் ஆர்சிபி பயிற்சியாளர்? இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் அதிரடி பிளான்



இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின்தலைமைப்பயிற்சியாளர்பதவியில் இருந்து பிரெண்டன் மெக்கல்லம் விலகியுள்ள நிலையில், அவருக்குப் பதிலாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்சிபி) அணியின்தலைமைப்பயிற்சியாளரான ஆண்டி பிளவரை நியமிக்க இங்கிலாந்து தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆண்டிபிளவர்தலைமையில்ஆர்சிபிஅணிசிறப்பாகசெயல்பட்டுஅடுத்தடுத்த ஐபிஎல் கோப்பைகளை வென்றது. இதனால் அவரை இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க இங்கிலாந்து நிர்வாகம் ஆர்வம் காட்டி வருவதாக கூறப்படுகிறது. ஆண்டி பிளவர் ஏற்கனவே 2007 முதல் 2014 வரைஇங்கிலாந்துஅணியின்தலைமைப்பயிற்சியாளராகபணியாற்றியஅனுபவம்கொண்டவர்.அவரதுதலைமையில் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரை வென்றதுடன், 2010ம் ஆண்டு டி20 உலகக் கோப்பையையும் கைப்பற்றியது. மேலும், டெஸ்ட் தரவரிசையில் உலகின் நம்பர்1 அணியாகவும் உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# "புது கேப்டனுக்கு டைம் கொடுங்க" ஸ்ரேயாஸ் ஐயருக்கு ஆதரவு தெரிவித்த இந்திய முன்னாள் வீரர்



இந்திய டி20 அணியின் புதிய கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயரின் கேப்டன்சி குறித்து விமர்சனங்கள்அதிகரித்து வரும் நிலையில், அவருக்கு ஆதரவாக முன்னாள் இந்திய வீரர் அபிஷேக் நாயர் கருத்து தெரிவித்துள்ளார்.

ஸ்ரேயாஸ் ஐயர் கேப்டனாக பொறுப்பேற்ற பிறகு இந்திய அணி இன்னும் ஒரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை. அயர்லாந்துக்கு எதிரான டி20 தொடரை 20 என்ற கணக்கில் இழந்த இந்தியா, தற்போது இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடரையும் கைநழுவவிட்டது. இதன் காரணமாக உலக சாம்பியனான இந்திய அணி, சர்வதேச டி20 தரவரிசையில் தனது முதலிடத்தையும் இழந்தது.

இதனால் ஸ்ரேயாஸ் ஐயரின் கேப்டன்சி குறித்து பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில், அவருக்கு ஆதரவாக அபிஷேக் நாயர் பேசியுள்ளார்.

அவர் கூறுகையில், "ஒரு சாம்பியன் அணியை புதிய கேப்டனிடம் ஒப்படைக்கும் போது, அவருக்கு தேவையான சுதந்திரமும், போதுமான கால அவகாசமும் வழங்க வேண்டும். பொறுப்பேற்ற உடனேயே ஒருவரால் அணியில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

இந்த இரண்டு தொடர் தோல்விகள் மூலம் அணிக்கு என்ன தேவை, வீரர்களை எப்படி பயன்படுத்த வேண்டும், பயிற்சியாளர் குழுவுடன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை ஸ்ரேயாஸ் ஐயர் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். எனவே, இப்போதே அவரது கேப்டன்சி இந்திய அணியின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது என்று கூறுவது மிகவும் கடுமையான மற்றும் தவறான விமர்சனமாகும். தற்போதைக்கு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க தேவையில்லை," என்று தெரிவித்துள்ளார்.

# விம்பிள்டன் கோப்பையை கைப்பற்ற அதுதான் காரணம்' நோஸ்கோவா



முதல் முறையாக விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்ற செக் குடியரசை சேர்ந்த லிண்டா நோஸ்கோவா, தனது வெற்றிக்கு பின்னால் இருந்த சுவாரசியமான விஷயத்தை பகிர்ந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்து வந்தது. இதில் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில், லிண்டா நோஸ்கோவா 62, 57, 63 என்ற செட் கணக்கில் கரோலினா முச்சோவாவை வீழ்த்தி தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். போட்டியின் இரண்டாவது செட்டை இழந்த பிறகு, நோஸ்கோவா பாத்ரூமுக்கு சென்று முகத்தை கழுவி விட்டு வெளியே வரும் வழியில், இரண்டாம் இடம் பெறுபவருக்கான சிறிய கோப்பையையும், சாம்பியனுக்கான பெரிய கோப்பையையும் பார்த்துள்ளார். அந்த தருணத்தில், "நான் சிறிய கோப்பையுடன் வெளியேற மாட்டேன். என்ன நடந்தாலும் சாம்பியனுக்கான பெரிய கோப்பையைத்தான் வெல்வேன்" என்று தனக்குள் உறுதி எடுத்து கொண்டதாக நோஸ்கோவா தெரிவித்துள்ளார். அதன் பின்னர் மூன்றாவது செட்டில் அற்புதமாக விளையாடி முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். 21 வயதான லிண்டா நோஸ்கோவா, 2011ம் ஆண்டுக்கு பிறகு விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்ற மிக இளவயது வீராங்கனை என்ற பெருமையை நோஸ்கோவா பெற்றுள்ளார். இதற்கு முன்பு இந்த சாதனையை செக் குடியரசின் டென்னிஸ் ஜாம்பவான் பெட்ரா க்விட்டோவா படைத்திருந்தார்.

# சிவராஜ்குமார் நடித்த 'பெயில்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




கன்னட திரையுலகின் முன்னணி நடிகரான சிவராஜ்குமார், 1974ஆம் ஆண்டு வெளியான 'ஸ்ரீனிவாச கல்யாணம்' திரைப்படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். இதுவரை 120க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள அவர், தமிழில் 'ஜெயிலர்' படத்தின் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். தற்போது 'ஜெயிலர் 2' திரைப்படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இதற்கிடையில், இயக்குநர்பவன்வடேயார்இயக்கத்தில்உருவாகிவரும் 'பெயில்'திரைப்படத்தில் சிவராஜ்குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகி வரும் இந்தப் படத்தை கேவின்புரொடக்ஷன்ஸ்நிறுவனம்தயாரிக்கிறது. இதில் சஞ்சனா ஆனந்த், கோபாலகிருஷ்ண தேஷ்பாண்டே, ஜெயராம், சாய் குமார் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

முதலில், 'பெயில்' திரைப்படம் வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சில தவிர்க்க முடியாத காரணங்களால் படத்தின் வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், 'பெயில்'திரைப்படத்தின்புதிய வெளியீட்டு தேதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி, படம் அக்டோபர் 2ஆம் தேதி (காந்தி ஜெயந்தி) உலகம்முழுவதும்திரையரங்குகளில்வெளியாகவுள்ளது புதிய ரிலீஸ் தேதியுடன்வெளியானஅறிவிப்பு ரசிகர்களிடையே கவனம் பெற்றுள்ள நிலையில், சிவராஜ்குமார் நடிப்பில் உருவாகியுள்ள இந்த ஆக்ஷன் திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# விஷ்ணு விஷாலின் கேரியரில் அதிக வசூல் செய்த படம்... 'கட்டா குஸ்தி 2' சாதனை




தமிழ் சினிமாவின் முக்கிய நடிகர்களில் ஒருவரான விஷ்ணு விஷால், இயக்குநர் செல்லா அய்யாவுடன் மீண்டும் இணைந்துள்ள திரைப்படம் 'கட்டா குஸ்தி 2'. கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான 'கட்டா குஸ்தி' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றதையடுத்து, அதன் இரண்டாம் பாகம் தற்போது வெளியாகியுள்ளது.

விஷ்ணு விஷாலுடன் மீண்டும் ஐஸ்வர்யா லட்சுமி கதாநாயகியாக நடித்துள்ள இந்தப் படத்தில், முனிஷ்காந்த், காளி வெங்கட், கருணாகரன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். விஷ்ணு விஷால் மற்றும் வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இப்படம், காமெடி மற்றும் குடும்ப பொழுதுபோக்கு அம்சங்களுடன் உருவாகியுள்ளது.

கடந்த வாரம் திரையரங்குகளில் வெளியான 'கட்டா குஸ்தி 2', முதல் நாளிலிருந்தே ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. நேர்மறையான விமர்சனங்களும், குடும்ப ரசிகர்களின் ஆதரவும் கிடைத்துள்ளதால், இரண்டாவது வாரத்திலும் பல இடங்களில் ஹவுஸ்ஃபுல் காட்சிகளுடன் படம் ஓடிக்கொண்டிருக்கிறது. இதையடுத்து, படத்தின் திரையிடல் 700க்கும் மேற்பட்ட திரைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், 'கட்டா குஸ்தி 2' திரைப்படம் உலகம் முழுவதும் ரூ.50 கோடிக்கும் அதிகமான வசூலை ஈட்டி வணிக ரீதியாக மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை விஷ்ணு விஷால் நடித்த படங்களில் 2018ஆம் ஆண்டு வெளியான 'ராட்சசன்' திரைப்படமே அதிகபட்சமாக சுமார் ரூ.40 கோடி வசூலித்திருந்தது. தற்போது 'கட்டா குஸ்தி 2' அந்த சாதனையை முறியடித்து, விஷ்ணு விஷாலின் திரைப்பயணத்தில் அதிக வசூல் செய்த திரைப்படமாக உருவெடுத்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ரசிகர்களின் தொடர் ஆதரவால், வரும் நாட்களிலும் படத்தின் வசூல் மேலும் உயரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

# தனுஷ் ரசிகர்களுக்கு குட் நியூஸ்.. 'ஓம்' படத்தின் பைனல் ஷெட்யூல் தொடக்கம்




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரான தனுஷ், வித்தியாசமான கதைக்களங்களைத் தேர்வு செய்து தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார். சமீபத்தில் வெளியான 'கர' திரைப்படத்தைத் தொடர்ந்து, 'அமரன்' படத்தின் இயக்குநர்ராஜ்குமார்பெரியசாமிஇயக்கத்தில்உருவாகிவரும்'ஓம்'திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

வுண்டர்பார் பிலிம்ஸ் மற்றும் ஆடேக்ஸ் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்து வரும் இந்த ஆக்ஷன் திரைப்படத்தில், ஸ்ரீலீலா மற்றும் சாய் பல்லவி கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மேலும், மலையாள திரையுலகின் முன்னணி நடிகர் மம்முட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள நிலையில், பாலிவுட் நடிகர் நஸ்ருதீன் ஷாவும் முக்கிய வேடத்தில் இணைந்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நஸ்ருதீன் ஷா தமிழில் நடிப்பதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

சமீபத்தில் வெளியான 'ஓம்' படத்தின் டைட்டில் போஸ்டர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. மேலும், இப்படம் வருகிற அக்டோபர் 16ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த நிலையில், 'ஓம்' திரைப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்கியுள்ளது. தனுஷ் மற்றும் மம்முட்டி தொடர்பா காட்சிகள் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகறது. இந்த இறுதி கட்ட பணிகள் விரைவில் நிறைவடைய உள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

'ஓம்' படத்தின் முழு படப்பிடிப்பும் நிறைவடைந்த பிறகு, நடிகர் தனுஷ் சிறிய இடைவெளி எடுத்துக்கொண்டு, இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்கும் தனது அடுத்த திரைப்படத்தின் படப்பிடிப்பில் இணைய உள்ளதாக சினிமா வட்டாரங்களில் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், தனுஷின் அடுத்தடுத்த படங்கள் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் மேலும் அதிகரித்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.